(அ) சென்னிமலையில் நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே சென்னிமலையில் நெசவாளர்களுக்கு 332 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலையில் 5000 கைத்தறி நெசவாளர்களுக்கு மேலாக இருக்கிறார்கள். 40-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. வீடுகளினுடைய தேவை அதிகமாக இருக்கின்றது. அங்கே 'வெப்பிலி-க்கு அருகாமையில் 20 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதனை தற்போது தனியார்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலே வீடு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில், சம்பந்தப் பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிலங்களை இலவசமாக அளித்தால்தான் அரசு வீடு கட்டிக் கொடுக்க முயலும்.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களிடத்திலே கூலிக்கு நெசவுத் தொழில் செய்கின்ற நெசவாளர்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். இங்கே நான் குறிப்பிட்ட நிலமானது அரசுக் குச் சொந்தமான புறம்போக்கு நிலமாக இருக்கிறது அதனை தனியார்கள் தற்போது அதிகமாக ஆக்கிரமித்து வருகிறார்கள். ஆகவே, அந்த நிலத்தை அரசு எடுத்துக் கொண்டு அந்த இடத் தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட துணை இயக்கு நரிடம் சொல்லி இது மாதிரி நிலத்தை ஒதுக்க ஏற்பாடு செய் தால் அரசு வீடு கட்டிக் கொடுக்க முன் வரும்.

விசைத்தறியில் லுங்கிகள் தயாரித்தல்.

791—*(வினா எண் 9345) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைத் தறிகள் மூலம் 40 அங்குல அகலத்திற்கு மேல் லுங்கிகள் நெசவு செய்யக்கூடாது என்கின்ற விதிகளை மீறி 50 மற்றும் 54 அங்குல அகலத்திற்கு மேலும் லுங்கிகள் நெசவு செய்யப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அனுமதி பெற்ற விசைத் தறிகளும் இருக்கின்றன, அனுமதி பெறாத விசைத் தறிகளும் இருக்கின்றன. அவர்கள் இன்றைக்குக் கரை போட்ட வேட்டிகளையும், லுங்கிகளையும் நெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் கைத்தறியில் தயாரிக்கபடும் லுங்கிகள் ஏராளமாகத் தேங்கியிருக்கின்றன. காரணம், கைத்தறியில் நெய்யபடும் லுங்கியின் விலை, விசைத் தறி மூலம் நெய்யப்படும் லுங்கியைவிட பத்து ரூபாய் அதிகமாக இருப்பதால் அவர்களோடு இவர்களால் போட்டி போட முடியவில்லை. அப்படித் தயாரிக்கின்ற விசைத் தறியாளர்களின் மீது கடுமையான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் அரசு முயற்சி செய்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்கு மைய அரசின் உதவியை கோரியிருக்கிறோம்.

வேடசந்தூர் மின் கோட்டப் பொறியாளர் அலுவலகம்.

774—(*வினா எண் 1425) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டத்தின் பகுதிகளுக்கு உரிய மின் துறை கோட்டப் பொறியாளர் அலுவலகம் திண்டுக்கல்லில் அமைத்துள்ளதை மாற்றி வேடசந்தூரில் அமைக்க கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?